9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1981 ஆகஸ்டு 24, திங்கட்கிழமை

ஆவணி 8, துன்மதி—திருவள்ளுவர் 2012

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை."

பொதுநலப் பணியில், நாட்டு ஆட்சியில் ஈடுபட்டோர், தனக்கும், தன் தலைவனுக்கும், தன் நாட்டிற்கும் புகழையும், நன்மையையும் தராத செயல்களை எப்பொழுதும் செய்யவே கூடாது.

ஆற்காட்டிலுள்ள துணைக் கருவூலம்

*வினா 21—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு நிதியமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ஆற்காடு தொகுதியில் ஆற்காடு நகரத்தில் துணைக் கருவூலத்தை மாற்றி தலைமைக் கருவூலம் அமைக்கப்படுமா ?

(ஆ) தற்போது உள்ள துணைக் கருவூலம் அரசு கட்டிடத்தில் மாற்றும் திட்டம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(ஆ) ஆம்.

(இ) விரைவில் நிறைவேற்றப்படும்.

திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆற்காடு தாலுகாவில் சப் ரிஜிஸ்திரார் ஆபீசும், தாலுகா ஆபீசிலே இரண்டாம் வகுப்பு மாஜிஸ்திரேட் கோர்ட்டும் வரயிருக்கின்ற காரணத்தினாலும், நேஷனலைஸ்ட் பாங்கு இருக்கின்ற காரணத்தினாலும், தலைமைக் கருவூலத்தை நிறுவ அரசும், அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

9 - JUL 1982

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன்—தலைமைக் கருவூலம் என்பது மாவட்டத் தலை நகரங்களிலே அமைந்திருக்கும் ஒன்றாகும். ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரில் தலைமைக் கருவூலமும், மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்களும், மிக மிக அவசியமாகத் தேவைப்படுகின்ற துணை வட்டங்களில் துணைக் கருவூலங்களும் அமைக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே, மாவட்டத் தலைநகரங்களில் தலைமைக் கருவூலங்கள் அமைக்கப்படும்; மற்ற வட்டத் தலைநகரங்களில் துணைக் கருவூலங்கள்தான் அமைக்கப்படும்.

அரசு பரிசுச் சீட்டில், பரிசுத் தொகையை வாங்காததால் சேர்ந்துள்ள தொகை

*வினா 22—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தமிழக அரசு நடத்தும் பரிசுச் சீட்டில் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979–80 ஆம் ஆண்டுகளில் சேர்ந்துள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் கீழ் பரிசு விழுந்த நபர்கள் பரிசுத் தொகையை வாங்காததால் 1979–80 ஆம் ஆண்டில் சேர்ந்த தொகை ரூபாய் 68,12,500 ஆகும்.

திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொகை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்படி பரிசுச் சீட்டின் மூலம் அரசுக்குக் கிடைக்கின்ற வருவாய் தொகைகள் குறிப்பாக, தமிழக தனி நல்வாழ்வு நிதிக்கும், குடிநீர் வழங்குகின்ற பணிக்கும், அரிசனங்களுக்கு வீட்டு மனை வாங்குகின்ற பணிக்கும், தேசியப் பாதுகாப்பு நிதி அளிக்கின்ற பணிக்கும், முதலமைச்சருடைய பெருவெள்ளம், பெரும் புயல் ஆகியவற்றால் சேதம் ஏற்படுகின்ற நிவாரண நிதிக்கும், முதலமைச்சருடைய பெயரால் அமைந்துள்ள பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதிக்கும் பல்வேறு வகைகளிலே அவ்வப்போது கிடைக்கின்ற நிதி பிரித்து அளிக்கப்படுகின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு நடத்துகின்ற வகை மாவட்டந்தோறும் நடத்துவதற்கான குறிப்பு ஒரு காலத்திலே இருந்தது. அரசு அதைப் பற்றிச் சிந்தித்து ஆவன செய்ய முடிவெடுக்குமா ?